10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 208 திங்கட்கிழமை டிசெம்பர் 18 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## முதலமைச்சரை சந்திப்பார் மலேசியப் பிரதமர்





கோலாலம்பூர், டிசெ. 18

இலங்கை வந்துள்ள மலேசியப் பிரதமர் நஜீப் பின் துன் அப்துல் ரஷாக் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்துப் பேசுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக மலேசிய வெளிவிவகார அமைச்சுக் கூறிய போதும் சந்திப்புக் குறித்து மேலதிக விவரங்களைத் தெரிவிக்கவில்லை. (ச)

## புலிகளின் நகைகளை தேடியவர்கள் கைது

முல்லைத்தீவு, டிசெ.18

விசுவமடு அதிசய விநாயகர் கோவில் வீதிப் பகுதியில், கிளிநொச்சியில் இருந்து வந்த மூவர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் நேற்று அதிகாலை 168 கீழ் 1 என்ற இலக்கம் கொண்ட வீட்டில் விடுதலைப்புலிகளால் நகைகள் மற்றும் புதையல்கள் புதைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் இடத்திலேயே புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

06▶

## வவுனியா விபத்தில் ஒருவர் பலி

வவுனியா, டிசெ. 18

யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வான், நடந்து சென்றவரை மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த என். விலால் (வயது 46) என்பவரே உயிரிழந்தார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த கல்வியியல் கல்லூரிக்கு சொந்தமான வாகனமே இந்த விபத்தை ஏற்படுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய வாகனச் சாரதி கைது செய்யப்பட்டதுடன்,

06▶

## முல்லைத்தீவில் மர்மக் காய்ச்சல்
### கட்டுப்படுத்த டக்ளஸ் கோரிக்கை



முல்லைத்தீவு, டிசெ.18

முல்லைத்தீவு நகரில் பரவி வருகின்ற ஒரு வகை காய்ச்சல் காரணமாக, கடந்த மூன்று வார காலப் பகுதியில் ஒன்பது பேர் உயிரிழந்த நிலையில், இந்த நோய் பரவாமல் இருப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை உடன் முன்னெடுக்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா சுகாதார, போசாக்கு மற்றும் தேசிய மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

“வடக்கில் டெங்கு நோயாளர்களது அதிகரிப்பு

06▶

## இன்று ஆரம்பம்
### இரண்டாம் கட்ட வேட்பு மனு ஏற்றல்

கொழும்பு, டிசெ. 18

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட கட்டுப்பணம் மற்றும் வேட்பு மனுக்களைப் பொறுப்பேற்கும் பணி இன்று ஆரம்பமாகின்றது.

இதன் போது 248 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கட்டுப்பணமும் வேட்பு மனுவும் பொறுப்பேற்கப்படும். கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் புதன்கிழமை நண்பகல் 12.00 மணியுடன் நிறைவுறும். வேட்பு மனுக்கள் பொறுப்பேற்றல் எதிர்வரும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவுபெறும்.

06▶

# எழுச்சிக்குத் தயாராகுங்கள்
## இளைஞர்களுக்கு விக்னேஸ்வரன் அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 18

எழுச்சியால் எவ்வாறு முதலமைச்சரை இது வரை நிலைக்க வைத்தீர்களோ, அதே எழுச்சியை மக்கள் இயக்கமாகப் பரிணமித்து அரசாங்கத்துக்குக் காட்ட வேண்டிய தருணம் வந்து விட்டது.

06▶



மண்டியிட்டால் உயர்ச்சி பெற்றிருப்போம்

புதிய அரசியல் யாப்பு உடன் தேவை

13 இன் அதிகாரங்கள் போதாது

அடிவருடிகளே பிரதிநிதிகளை மதிப்பதில்லை

06▶

## நாங்கள் பினாமிகள் அல்ல!
### வல்வை சுயேச்சைக் குழு

வல்வெட்டித்துறை, டிசெ. 18

“வல்வெட்டித்துறை நகர சபையை கடந்த முறை ஆட்சி செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயல்களே எம்மைத் தேர்தலில் போட்டியிடச் செய்தது. எமக்குப் பின்னால் முன்னாள் தவிசாளர் அனந்தராஜோ அல்லது வேறு எவருமோ இல்லை”

- இவ்வாறு இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வல்வெட்டித்துறை நகர சபையில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியுள்ள சுயேச்சைக் குழுவின் தலைவர் சபாரட்ணம் செல்வேந்திரா தெரிவித்துள்ளார்.

முன்னாள் தவிசாளர் அனந்தராஜின் பின்னணியிலேயே சுயேச்சைக் குழு ஒன்று பணம் கட்டியுள்ளது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் குற்றஞ்சாட்டியிருந்தார். இதனையே இப்போது சுயேச்சைக் குழுவின் தலைவர் மறுத்துள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபையை கடந்த முறை ஆட்சி செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்று சொல்லித் தெரிய

06▶

## வாள்வெட்டுக் குழுவின் இளைஞர் இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 18

மக்களால் விரட்டப்பட்டுத் தப்பிச் சென்ற வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கோண்டாவில் குட்செட் வீதியில் வாளுடன் மோட்டார் சைக்கிளில் இருவர் சென்றுள்ளனர். அவர்களை அப்பகுதி மக்கள் விரட்டி விரட்டித் தாக்கினர்.

இதனால் அவர்கள் மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். விட்டுச் சென்ற மோட்டார் சைக்கிளை மக்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இதையடுத்து கொக்குவில், கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த 18, 20 வயதுடைய இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் இருந்து வாள் ஒன்றும் இரும்பு பைப் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன. கொள்ளையிடும் நோக்கிலேயே இவர்கள் அங்கு சென்றனர் எனக் கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)




உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# வேட்பாளர்களைக் கண்காணிக்க விசேட உளவுப்படை அமைப்பு

கொழும்பு, டிசெ.18
எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைக் கண்காணிப்பதற்கு விசேட உளவுப்படையொன்று கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் கூட்டங்கள் மற்றும் பிரசாரங்கள் தொடர்பில் கண்காணிப்பதற்காகவே இந்த உளவாளிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். தேர்தல் கூட்டங்கள் மற்றும் பிரசார நடவடிக்கைகளின் போது தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்றனவா என்பது குறித்து தகவல்களை பெற்றுக் கொள்ளும் நுட்பமான முறைகளை அறிமுகம் செய்ய தேர்தல் கண்காணிப்பாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

குறிப்பாக பொருட்களை வழங்குதல், பணம் வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை கையும் களவுமாக பிடிக்கக்கூடிய வகையிலான பொறிமுறைமை உருவாக்கப்படும் எனத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். புகைப்படங்கள், காணொளிகள் உள்ளிட்ட ஆதாரங்களின் ஊடாக வேட்பாளர்கள் தேர்தல் விதி மீறல்களில் ஈடுபடுவது பற்றிய விபரங்கள் திரட்டப்பட்டு அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் தேர்தல் வன்முறைகள் தொடர்பிலேயே தேர்தல் கண்காணிப்புக்குழுக்கள் கூடுதல் கவனம் செலுத்தி வந்தன. எனினும் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேர்தல் விதி மீறல்கள் இடம்பெறுகின்றனவா, வேட்பாளர்கள் மோசடியான முறையில் பிரசாரம் செய்கின்றார்களா என்பது குறித்தும் தீவிரமாகக் கண்காணிக்கப்படும் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)



# இலங்கைக்கு வந்தார் மலேசியப் பிரதமர்

கொழும்பு, டிசெ.18
மலேசியப் பிரதமர் நஜீப் பின் துன் அப்துல் ரஸாக் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பை வந்தடைந்தார்.

அவரை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக்க மாரப்பன தலைமையிலான குழுவினர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இவர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரையில் இலங்கையில் தங்கியிருப்பார்.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இலங்கை வந்துள்ள மலேசியப் பிரதமர், இலங்கையில் பல்வேறு நிகழ்வுகளிலும், பேச்சு வார்த்தைகளிலும் பங்கேற்கவுள்ளார்.

விஞ்ஞான தொழில்நுட்பம், புதிய உற்பத்திக்கான உடன்படிக்கை ஆகியன தொடர்பில் இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான மூன்று புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

இந்த உடன்படிக்கைகளின் மூலம் பொருளாதார அபிவிருத்தி மற்றும் இராஜதந்திர பயிற்சிகளுக்கும் திட்டமிடப்பட்டுள்ளன. இரண்டு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவுகள் 60 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு விசேட முத்திரை ஒன்றும், கடித உறையொன்றும் வெளியிடவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)


# காலம் முடிந்தது: தூதுவர் போகிறார்

கொழும்பு, டிசெ.18
தமது பதவிக்காலம் முடிவடைந்ததால், இலங்கைக்கான சீனாவின் தூதுவர் சியான்லியாங் நாடு திரும்பவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையில் மூன்று வருடங்களாகத் தூதுவராக செயற்பட்ட நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை இவர் சீனா திரும்பவுள்ளார். கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த அவர் தமது பதவிக் காலத்தில் பல்வேறு திட்டங்களை செய்து முடித்துள்ளார். இதேவேளை, தமது பதவிக் காலத்தில் இலங்கையின் 9 மாகாணங்களுக்கும், 25 மாவட்டங்களுக்கும் விஜயம் செய்த சியான் லியாங், இலங்கைக்கும் சீனாவுக்குமான உறவில் ஏற்பட்டிருந்த விரிசலை இல்லாமலாக்கி, மீண்டும் சுமுக நிலையை ஏற்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)



# களனியில் திடீரென 'தீ'



கொழும்பு, டிசெ.18
களனி - திப்பிடிகொட பகுதியிலுள்ள பொலித்தீன் தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றில் நேற்று அதிகாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

பொலிஸாருக்கும்தீயணைப்பு பிரிவினருக்கும் வழங்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு குழுவினர், பொது மக்களின் உதவியோடு தொழிற்சாலையில் பரவிய தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

குறித்த சம்பவத்தில் எதுவித உயிர் ஆபத்துக்களும் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தீ விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை. (அ)

# 5 லட்சம் இலங்கையர்களுக்கு அடையாள அட்டை இல்லை


கொழும்பு, டிசெ.18
தேசிய அடையாள அட்டை இல்லாமல் இன்னமும் ஐந்து இலட்சம் பேர் இலங்கையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் மூன்று இலட்சம் பேர் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் எனவும், பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட தேவையான தகவல்கள் இன்மையே இவர்கள் இதுவரை அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாமைக்கான காரணம் எனவும் ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் பிறப்புச்சான்றிதழ் இல்லாதவர்கள் ஏனைய தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து அடையாள அட்டையைப் பெறும் மாற்று வேலைத்திட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் சகல மாவட்டங்களதும், மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள் தமக்கு நெருங்கிய உறவு அல்லது பிரதேசவாசிகள் மூவருடைய உறுதிப்படுத்தலைப் பெறுவது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டமானது எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பு வாக்காளர்கள் தேசிய அடையாள அட்டையினைப் பெறுவதற்கான தற்காலிக வேலைத்திட்டம் என்றும் ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)



# அகதிகளுக்கு அபராதம்!

கொழும்பு, டிசெ.18
நீண்ட காலமாக தமிழகத்தில் அகதிகளாக இருந்து, இலங்கைக்கு திரும்பியவர்களுக்கு குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

"நாடு திரும்பியுள்ள இலங்கை அகதிகளில் தமிழகத்தில் பிறந்து, 21 வயதைப் பூர்த்தி செய்த இலங்கையர்கள் சுமார் 25,000 ரூபா அபராதம் செலுத்த வேண்டியுள்ளது. தமிழகத்திலுள்ள 107 முகாம்களில் சுமார் 63,000 இலங்கை அகதிகள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு மீண்டும் நாடு திரும்பும் விருப்பம் உள்ளபோதும், இவ்வாறான அபராதம், இலங்கைக்கு வருவதில் இந்தியாவில் உள்ள சட்டச் சிக்கல் களாலேயே அவர்கள் அங்கேயே இருக்கிறார்கள்" என ஈழ அகதிகள் மறுவாழ்வு மையத்தின் பொருளாளர் எஸ்.சி.சந்திரஹாசன் தெரிவித்துள்ளார். (அ)

# முதலில் அவர்கள் திருந்தட்டும்!

## அமைச்சர் நிமால் காட்டம்

கொழும்பு, டிசெ.18
"அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு நல்லிணக்கத்தை கற்பிக்க முயற்சிக்கின்றன. ஆனால் அந்நாடுகளில் கூட இன்னும் நல்லிணக்கம் இல்லை" என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"உலக அரசியலை எடுத்துக் கொண்டால், அமெரிக்கா, பிரிட்டன் என அனைத்து நாடுகளும் எமக்கு நல்லிணக்கத்தைப் போதிக்க நினைக்கின்றன. அவர்களின் எண்ணக்கருவை எமது தலைகளுக்குள் இடுகின்றனர். எனினும் அமெரிக்காவின் ஜனாதிபதி ட்ரம்பின் எண்ணக்கருவில் நல்லிணக்கம் இல்லை. அது உக்கிரமான இனவாதம். மேற்குலக நாடுகள் உலகத்துக்குத் திறந்து விடப்படவில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறு எம்மிடம் கூறினாலும் அந்த நாடுகளில் நல்லிணக்கம் என்பது கிடையாது. எமக்கு வெளிநாடுகளின் ஆலோசனைகள் தேவையில்லை. நாம் நமது நாட்டுக்கே உரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும்" எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (அ)



# தேர்தலில் 'ரவுடி மகன்'

கொழும்பு, டிசெ.18
பிரபல பாதாள உலகக்குழு ஒன்றின் தலைவரின் மகனும் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட உள்ளார்.

நாட்டில் பிரதானமாக இயங்கி வரும் எட்டு பாதாள உலகக்குழுக்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றனர் எனப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

பிரதான அரசியல் கட்சிகளின் ஊடாக இவர்கள் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். தேர்தலில் போட்டியிடும் நோக்கில், பாதாள உலகக்குழுவொன்றின் தலைவரின் மகன் வெளிநாடொன்றிலிருந்து நாடு திரும்பியுள்ளார். எனவே, இம்முறை தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்கள் தொடர்பிலும் விசேட விசாரணைக் குழுவொன்றை நியமித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பாதுகாப்பு உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
திங்கள். 18 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

## பதவி படுத்தும் பாடு!

தமிழரசுக் கட்சிக்குள் இருந்த பிடுங்குப்பாடுகள் தொகுதி ரீதியாகவும் விசாலமடைந்து குழப்பத்தை இன்னும் அதிகரிக்கச் செய்கின்றன.

சாவகச்சேரி நகரசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுவில் இடம்பெற்றிருந்த 7 பேர், "கபடத்தனமாக ஏமாற்றியே, எங்களிடம் வேட்புமனுவில் கையொப்பம் வாங்கப்பட்டது. எனவே நாங்கள் போட்டியில் இருந்து விலகுகிறோம்" என்று ஒரு கடிதத்தை தேர்தல் திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைத்தாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது. குறித்த 7 பேரின் கையொப்பங்களுடன் கூடிய அந்தக் கடிதமும் இணையங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் ஒரு 'ரவுண்ட்' சுற்றி வருவதற்கிடையில், இன்னொரு கடிதம் அதே தேர்தல் திணைக்கள அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

"முதலில் நாங்கள் கையொப்பத்தை எங்கள் விருப்போடே வைத்தோம். ஆனால் அதன் பின்னர் கட்சிக் கூட்டம் என்ற பெயரில் வெள்ளைத்தாளில் கையொப்பம் இட்டதை, இப்படித் திரித்து எழுதி கடிதமாக்கி உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். நாங்கள் தேர்தலில் இருந்து விலகவில்லை" என முன்னைய கடிதத்தில் கையொப்பமிட்ட ஏழுபேரில் ஐவர் தெரிவித்திருந்தனர். மிகுதி இரண்டு பேரும் கையொப்பமிடவில்லை. இப்போது எந்தக் கடிதத்தை நம்பி, அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது எனத் தெரியாமல் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் குழம்பிப் போயுள்ளார்கள். சிலவேளை "முன்னர் வாங்கிய கையொப்பத்தை பயன்படுத்தியே இரண்டாவது கடிதத்தை தயாரித்துள்ளார்கள். எனவே நாங்கள் விலகியது விலகியதுதான்" என்று மூன்றாவது கடிதம் வருமோ என்ற கலக்கமும் அவர்களுக்குண்டு. ஏனெனில் அப்படியான 'கிலிசைகெட்ட' வேலைகள் தான், தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரித் தொகுதியில் நடந்து வருகின்றன. அருந்தவபாலனுக்கு ஆதரவாகவும், மாகாணசபை உறுப்பினர் சயந்தனுக்கு ஆதரவாகவும் கூறுபட்டு நிற்கிறது சாவகச்சேரி தமிழரசுக் கட்சிக் கிளை. இரு பகுதியினருமே ஏட்டிக்குப் போட்டியாக அடுத்தவரை விழுத்தும் காரியங்களைக் கடுகதியாக அரங்கேற்றி வருகின்றனர்.

சாவகச்சேரி நகரசபையில் தான் ஏமாற்றப்பட்டதால், குறைந்தபட்சம் சாவகச்சேரிப் பிரதேச சபையிலாவது தன்னுடைய ஆதரவாளர்களை மட்டுமே வேட்பாளர்களாக நிறுத்தி, சயந்தன் அணியை ஒரு கை பார்ப்பதென்று அருந்தவபாலன் முனைப்போடு செயலாற்றுகிறார். சாவகச்சேரி பிரதேச சபைக்கான தனது அணி வேட்பாளர்களை அழைத்து, தன் வீட்டில் இரகசியக் கூட்டமொன்றையும் அவர் நடத்தியுள்ளார். விடயறிந்து அங்கு சென்ற சயந்தனை, அருந்தவபாலனின் ஆதரவாளர்கள் வேறு காரணம் சொல்லி திருப்பி அனுப்பியுள்ளனர்.

அதைவிட இன்னுமொரு வேலையிலும் சயந்தன் அணிக்கு எதிரானவர்கள் இறங்கியுள்ளனர். நகர சபையில், சயந்தன் சார்பானவர்களை எப்பாடு பட்டேனும் தோற்கடிக்கும் வேலைதான் அது. இதனால் மாற்றுக் கட்சி வேட்பாளர்களுக்காக இவர்கள் இரகசிய வாக்கு வேட்டையிலும் இறங்கியுள்ளனர்.

தான் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறப் போவதாக அருந்தவபாலன் சாடை மாடையாகச் சொல்லியிருக்கிறார். அப்போதாவது தேசியப் பட்டியல் எம்.பி பதவியைத் தந்து இழுத்துப் பிடிப்பார்கள் என்று நம்புகிறார். எல்லாம் பதவி படுத்தும் பாடுதான்!

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# ஒய்வூதியத்துக்கு 23 ஆயிரம் கோடி

*கொழும்பு, டிசெ.18*

அடுத்த வருடத்தில் ஒய்வூதியக் கொடுப்பனவை வழங்குவதற்காக அரசாங்கம் 23 ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுகுறித்து ஓய்வூதியக் கொடுப்பனவுப் பணிப்பாளர் நாயகம் ஜகத் டயஸ் தெரிவிக்கையில்

"இவ்வருடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலும் பார்க்க 1300 கோடி ரூபா அடுத்த வருடத்துக்காக மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரையில் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறுவோரின் எண்ணிக்கை 6 இலட்சத்து 30 ஆயிரமாகும். வருடந்தோறும் 25 ஆயிரத்துக்கும் 30 ஆயிரத்துக்கும் இடைப்பட்டோர் இந்தப் பட்டியலில் புதிதாக இணைந்து கொள்கின்றனர் "என்றார். (அ)

## இவர்களிடமா அதிகாரம்?

*கொழும்பு, டிசெ.18*

"வேட்பு மனுக்களைக் கூட பிழையின்றித் தயாரிக்க முடியாதவர்களிடம் எவ்வாறு ஆட்சி அதிகாரத்தை வழங்க முடியும் ?" என ஜேவிபியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.



சில கட்சிகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"எமது கட்சி இப்பொழுதே வெற்றிப் பாதையில் பயணிக்கத் தொடங்கி விட்டது. எமது கட்சி தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் மட்டுமே நிராகரிக்கப்படாமல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

பிழை இன்றி வேட்பு மனுக்களை கூட எனைய கட்சிகளால் தாக்கல் செய்ய முடியவில்லை. அப்படிப்பட்டவர்களிடம் எவ்வாறு ஆட்சி அதிகாரங்களை வழங்க முடியும்? அதிகாரத்தில் இருப்பவர்கள் மற்றும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போரின் கவனயீனமே இவ்வாறு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணம்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ)

## போதைப் பொருளை ஒழிக்க விமானப்படையும் களத்தில்

*கொழும்பு, டிசெ.18*

போதைப் பொருள் ஒழிப்புக்கு விமானப்படையினரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை விமானப்படையைச் சேர்ந்த நாற்பது பேரைத் தெரிவு செய்து அவர்களுக்கு விசேட பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இவ்வாறு விசேட பயிற்சி வழங்கப்படும் விமானப்படை உத்தியோகத்தர்கள் நாட்டின் சகல பகுதிகளிலும் முழு நேர அடிப்படையில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

போதைப் பொருள் வர்த்தகர்கள் மிகவும் நுட்பமான முறைகளைப் பயன்படுத்தி போதைப் பொருள் விற்பனை மற்றும் விநியோகம் செய்து வருவதனால் அவற்றை தடுக்க இவ்வாறு விசேட பிரிவு ஒன்றை அமைக்க பாதுகாப்புத் தரப்பு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, இந்த விசேட பயிற்சி பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் கிராமிய மட்டத்தில் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பில் விழிப்புணர்வையும் ஏற்படுத்தவுள்ளனர். (அ)

## "புடினிடம் கெஞ்சுவேன்"

### மைத்திரி பரிதாபம்



*கொழும்பு, டிசெ.18*

இலங்கையின் தேயிலை மற்றும் விவசாயப் பொருட்களுக்கு ரஷ்யாவினால் விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிடம் கோரவுள்ளதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஹப்புத்தலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைகளில், ஒருவகை பூச்சியினம் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இலங்கையின் தேயிலை உள்ளிட்ட விவசாயப் பொருட்களுக்கு ரஷ்யாவினால் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்







*உடுவில், டிசெ.18*

சுவிஸ் நாட்டிலிருந்து செயற்படும் சுவிஸ் ரென்ட் ஏ கார் (Swiss Rent a Car) என்னும் தமிழர்களுக்குச் சொந்தமான நிறுவனத்தின் பணிப்பாளர் முருகுப்பிள்ளை விஜயகுமாரின் 43 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, வாகீசம் இணையத்தின் ஏற்பாட்டில் உடுவில் கோட்ட முன்பள்ளிகளைச் சேர்ந்த 43 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்வழங்கப்பட்டது.

சுன்னாகம் வரியப்புலம் மகாமாரி அம்மன் மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகம் ஜனசக்தி முன்பள்ளி ஆசிரியரும் உடுவில் கோட்ட முன்பள்ளி இணைப்பாளருமான ஜெ.வடிவாம்பிகை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில் உடுவில் கோட்ட முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கிருபானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சுவிஸ் ரென்ட் ஏ கார் நிறுவனம் சார்பில் இணைப்பாளராக துரைராசா சத்தியேந்திரா கலந்து கொண்டார். (அ)

## இன்று நாளும் கோளும்

18.12.2017 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 03 ஆம் நாள்

கேட்டை மு.ப. 08.09 மணி வரை — கரணம் மு.ப. 09.30 – 10.30 மணி வரை

இராகுகாலம் 07.30 – 09.00 — சுபநேரம் மு.ப. 06.15 – 07.15 — எமகண்டம் மு.ப. 10.30 – 12.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குழப்பம் | இரக்கம் | சோர்வு | கவலை | இன்பம் | கவனம் | வேதனை | ஆதாயம் | அனுகூலம் | சினம் | நன்மை | சுகம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிளாஸ்டிக் பெற்றோல் அரசுக்கு பெருநஷ்டம்

கொழும்பு, டிசெ.18

பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு பெற்றோல் தயாரிக்கும் திட்டத்தினால் அரசாங்கத்துக்கு சுமார் 25 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைப் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்திற்காக அமைச்சு, திறைசேரியிலிருந்து 25 கோடி ரூபாவினை பெற்றுக்கொண்டிருந்தது. எனினும், இந்தப் பணம் விரயமாக்கப்பட்டுள்ளதாகக் கணக்காய்வுத் தகவல்களின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கழிவுப் பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் ஒரு லீற்றர் எரிபொருளுக்கான உற்பத்தி செலவு 350 ரூபாவினை விடவும் அதிகமாக உள்ளது. ஆயினும் அதனை 40 ரூபாவுக்கே விற்பனை செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## அனுமதியற்ற துப்பாக்கி வைத்திருந்தவர் கைது

திருகோணமலை, டிசெ.18

திருகோணமலை - அக்போபுர பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி துப்பாக்கி வைத்திருந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்போபுர - தல்கஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளாரெனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர் சட்டவிரோதமாக துப்பாக்கி ஒன்றினை வைத்து, விலங்குகளை வேட்டையாடி வருவதாக, பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரது வீடு முற்றுகையிடப்பட்டது. அப்போதே சொட்கண் துப்பாக்கியுடன் சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

### 'கொர்..கொர்' எம்.பிக்களுக்கு

# இனிமேல் முழிப்பு 'ரொபி'



கொழும்பு, டிசெ.18

நாடாளுமன்றில் அமர்வுகள் நடைபெறும் போது நித்திரையில் ஆழ்ந்து போகும் உறுப்பினர்களுக்கு விசேட வகையான ரொபி ஒன்றை வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் அமர்வுகள் நடைபெறும் போது அமைச்சுப் பதவிகளை வகிக்கும் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆழ்ந்து உறங்கி விடுகின்றனர்.

அமர்வுகளின் போது அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் இவ்வாறு நித்திரையில் கொள்வதைத் தடுக்கும் நோக்கில், விஞ்ஞான தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரட்ன தமது அமைச்சின் அதிகாரிகளைக் கொண்டு மருந்து ஒன்றை உருவாக்கியுள்ளார்.

இனிப்பு மற்றும் வித்தியாசமான சுவையைக் கொண்ட இந்த மருந்தில் செய்யப்பட்ட ரொபியை உட்கொண்டால் நித்திரையை தவிர்க்க முடியும் என பரீட்சார்த்த முயற்சிகளின் போது தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற அமர்வுகளின் போது நித்திரைகொள்ளும் அரசியல்வாதிகளுக்கு இந்த ரொபி வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இனி நாடாளுமன்றில் 'கொர்' என்று தூங்காமல் எல்லோரும் விழித்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)



## இலவச மருத்துவ முகாம்



உரும்பிராய், டிசெ.18

பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்த மருத்துவர்களால் உரும்பிராயில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாம் காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளியில் நடைபெற்றது. இதில் ஏராளமானவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஒண்டின்ரையும் அடி, முடி விளங்காததுதான் எங்கடை பிரச்சினை

நேற்றெல்லே வில்லங்கப்பட்டுப்போனன். இரண்டொரு சாமான் வேண்ட வேண்டி வந்திட்டுது. எப்பிடியோ பஸ்ஸைப் பிடிச்சு யாழ்ப்பாணம் போட்டு வந்திட்டன். மினி பஸ் நெரிசல் தான். என்ன செய்யிறது.

கன நாளைக்குப் பிறகு போனதெல்லே. போனால் பழகின பழக்கம் விடேல்லை. வாய் வடை கேட்டுது. பஸ் ஸ்ராண்ட்டிலை இருக்கிற சைவக்கடை ஒண்டுக்கை போனன். போய் கன நேரத்துக்குப் பின்னாலை அந்தச் சாப்பாடு வைக்கிற பெடியன் வந்து என்ன வேணும் எண்டு கேட்டான். வடை எண்டன். பிறகு வாழை இலைத் துண்டொண்டைக் கொணடந்து வைச்சான். பிறகு போய் வடையைக் கொண்டு வந்தான். சம்பல் எண்டு கேட்டன். கன நேரத்துக்குப் பிறகு சம்பல் வாளியைக் கொண்டுவந்து ஒரு தேக்கரண்டியாலை இலையிலை தொட்டுப்போட்டுப் போட்டான். பிறகு எத்தினை தரம் சம்பல் கேட்டிருப்பன். ஆள் வரப் பஞ்சிப்பட்டிது. உடனை எனக்குக் கோவம் வந்திட்டுது. சத்தம் போட்டுக் கேட்டப் பிறகு திருப்பியும் வந்து ஒரு தேக்கரண்டி சம்பலை வைச்சிட்டு அவன் கேட்டான், "கடைசியா எப்ப தேங்காய் வாங்கினியள் ஐயா?, இப்ப தேங்காய் என்ன விலை விக்கிது தெரியுமோ?. கிட்டத்தட்ட ஒரு அமெரிக்க டொலர், என்ன?" எண்டான். எனக்கு அவன்ரை கதையைக் கேக்க வெக்கமாப் போச்சுது.

எங்கடை கோயில் மோதகத்திலையும் கொஞ்ச நாளா தேங்காப்பூவைக் காணேல்லை. ஐயரும் சொன்னவர் அருச்சனைக்கும் இப்ப ஆக்கள் தேங்காயைக் கொண்டு வாறேல்லையாம். அப்பிடிக் கொண்டு வந்தாலும் பக்குவமா கல்லிலை உடைச்சுப் போட்டுச் சொப்பினிலை போட்டுத் திருப்பிக் கொண்டு போவிடுவினமாம். முந்தினமாதிரி அங்கையே விட்டிட்டுப் போமாட்டினமாம்..

இண்டைக்கு பேப்பர் கடையடியிலை கதை வந்தாப் போலை உந்த சம்பல் கதையைச் சொல்லிச் சிரிச்சன். அதுக்குக் கச்சேரியாள் சொல்லிறார், "அண்ணை! தேங்காய் விலை கூடினதுக்குக் காரணம் இப்ப மழை இல்லாமல் போனதும், வரட்சி வந்ததுமில்லை. போர் சமயத்திலை பாதிக்கப்பட்ட தெங்குச் செய்கையும், பிறகு நாங்களும் பயிரிடுறதிலை அக்கறை இல்லாமலும் போயிட்டம். நாங்கள் மட்டுமில்லை உங்காலையும் தென்னந் தோட்டங்களையும் அழிய விட்டிட்டினம். பழைய எஸ்டேட் முதலாளியள் மாதிரி ஆரும் கவனமெடுத்துத் தென்னையைப் பயிரிடேல்லை. அபிவிருத்தி எண்ட போர்வையிலை கன தோட்டங்களை அழிச்சு தொழிற்சாலையளைக் கட்டிப்போட்டினம். முந்தி கட்டுநாயக்கா தொட்டு நீட்டுக்கு ஒரே தென்னந் தோட்டந் தானே? இப்ப கிட்டடியிலை போனாப்போலை பாத்தால் அந்தத் தோட்டக் காணியெல்லாம் புதிசாக் கன கட்டிடங்கள் வந்திட்டுது. இப்ப தேங்காய் பாவிக்கிற ஆக்களூம் கூட. அதோடை வெளிநாட்டுக்கும் கனக்க அனுப்புகினமெல்லே! ஆனபடியாலை இனி அதுக்கு நாங்கள் தான் ஏதாச்சும் செய்ய வேணுமேயொழிய அவனை இவனைப் பிழை சொல்லிச் சரிவராது." எண்டு அந்தாள் தேங்காய் பிரச்சினையை வைச்சு ஒரு பிரசங்கமே செய்திட்டுப் போட்டார்.

முதலியும் உதைத்தான் செல்லுறான். முந்திப் போயிலைக்குப் பிறகு பயறு, உழுந்து, குரக்கன் எண்டு பல சிறு தானியங்களையும் செய்தம். வயல் வெளிப் பக்கமும் நெல்லுக்குப் பிறகு எத்தினையைச் செய்தம். அவரவர் தனக்குத் தனக் கெண்டு செய்தாலே உங்கை கனக்க வந்திடும். இப்ப எல்லாரும் படிக்கினம். படிச்ச உடனை அரசாங்க வேலை தேடி ஒடுகினமே யொழிய, விவசாயத்தையும் ஒரு தொழிலாப் பாக்கிறேல்லை. விவசாயஞ் செய்யிறவையளை மதிக்கிறதுமில்லை.

வெளிநாட்டிலை விவசாயி தான் பணக்காரன். அப்பிடி எங்களிலையும் படிச்சுப்போட்டுப் படிச்சவையும் புதுப் புது முறையளிலை விவசாயத்தையும் ஒரு முழுநேர வேலையாச் செய்வம். அப்பிடிச் செய்தின மெண்டால் தொழிலுக்கும் ஒரு கம்பீரம் வரும். ஆளையாள் பாத்து எல்லாரும் பயிர் செய்யத் துவங்கி விடுவினம். அப்ப தேங்காய் இல்லை எல்லாச் சாமாங்களையும் நியாயமான விலைக்கு வாங்கலாம் – இப்பிடி முதலியும் ஒரு பிரசங்கம் செய்திட்டான்.

எல்லாரும் நினைக்கிறது அண்டண்டு வாற பிரச்சினை அண்டைக்குத் தான் முளைக்கிதெண்டு. ஆனால் அது அப்பிடியில்லை. அதுக்குக் கொட்டை போட்டிருப்பினை கன நாளைக்கு முன்னம். அது அவைக்கு விளங்காது. இப்ப எங்களுக்கை கன பிரச்சினை என்ன தெரியுமே? சரியா ஒண்டையும் விளங்காததுதானே! அது விளங்குதோ?

**- வில்லங்கம் விநாசி**

# வீதியால் வந்தது சண்டை புனரமைக்க இடையூறு

### ஆசிரியை உட்பட இருவர் கைது

அரியாலை, டிசெ.18

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட அரியாலை கிழக்கில், பிரதேச சபை ஊழியர்களைக் கடமையைச் செய்ய விடாமல் இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியை உள்ளிட்ட இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட அரியாலை கிழக்கு கருப்பையா வீதியைச் சீரமைக்க நடப்பாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கமைய அந்த வீதியைச் சீரமைப்பதற்கான பணிகள் நல்லூர்ப் பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டன.

அங்கு பணியில் ஈடுபட்டிருந்த பிரதேச சபை ஊழியர்களை அந்தப் பகுதியைச் சேர்ந்த இருவர் தடுத்துள்ளனர். அது தொடர்பில் நல்லூர்ப் பிரதேச சபையின் செயலாளரால் யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், பிரதேச சபை ஊழியர்களைக் கடமையைச் செய்யவிடாமல் இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவரைக் கைது செய்தனர்.

"கருப்பையா வீதி 338 மீற்றர் நீளத்தையும் 12 மீற்றர் அகலத்தையும் கொண்டது" என நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

எனினும் "கருப்பையா வீதி 4 மீற்றர் மட்டுமே அகலத்தைக் கொண்டது. .மிகுதிப்பகுதி தனியாருக்கு சொந்தமானது" எனச் சந்தேகநபர்கள் கூறுகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஆசிரியை, மற்றையவர் வங்கி ஊழியர் எனத் தெரிவிக்கப்பட்டது.

"கைதானவர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர். இந்தப் பிணக்கை நீதிமன்றின் ஊடாகவே தீர்க்க முடியும்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# கவனயீர்ப்புப் போரால் திருமலையில் பதற்றம்

திருகோணமலை, டிசெ.18

திருகோணமலை மாவட்ட ஆயர் நோயல் இமானுவேலின் அழைப்பின் பேரில் நத்தார் உற்சவத்திற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் திருகோணமலை கலாசார மண்டபத்திற்கு விஜயம் செய்திருந்தார். இந்த நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடியலையும் சங்கத்தினரால் கவனயீர்ப்பு போராட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்தப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் வேலையற்ற பட்டதாரிகளும் ஆதரவு வழங்கியிருந்தனர்.

இருப்பினும் இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தை நிறுத்துவதற்காக திருகோணமலை மாவட்ட பொலிஸ் தலைமையகத்தினால் நீதிமன்றத்தின் தடை உத்தரவு பெறப்பட்டது.

குறித்த தடையுத்தரவை போராட்டத்தில் ஈடுபட முனைந்தவர்களிடம் ஒப்படைக்க பொலிஸார் முயன்ற போது, அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது. எனினும் சிலமணி நேரத்தில் நீதிமன்ற உத்தரவை மதித்து, கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடியலையும் சங்கத்தினர் கலைந்து சென்றதால் பதற்றமும் தணிந்தது. (அ)

## அந்தநாள் ஞாபகம்



**18.12.1999**

கொழும்பு நகரசபை முன்னரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் அவர் தனது வலது கண்ணை இழந்தார்.

## மலர்களே..மலருங்கள்!

கொழும்பு, டிசெ.18

மலர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்று தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

புதிய வேலைத்திட்டத்தின் கீழ் மலர் உற்பத்தியாளர்களுக்கு தேவையான அறிவு, நடைமுறைப் பயிற்சி மற்றும் மலர்சாடி, உபகரணங்கள் என்பன இலவசமாக வழங்கப்பட உள்ளன.

தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள மலர் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை 6500 ஆகும். பதிவு செய்யப்படாதோரின் எண்ணிக்கையையும் சேர்த்தால் சுமார் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மலர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுக்கு மலர்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் இலங்கைக்கு கடந்த வருடம் 1 கோடி 36 இலட்சம் அமெரிக்க டொலர் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கரும்பு உற்பத்தியை அதிகரிக்க முடிவு

கொழும்பு, டிசெ.18

பெல்வத்த சீனித் தொழிற்சாலைக்கு அருகாமையில் கரும்பு உற்பத்தி நிலங்களில் நீர்ப்பாசனத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன் கீழ் கரும்பு உற்பத்தி நிலங்களில், உற்பத்தியை அதிகரித்து சீனி தயாரிப்பை அதிகரிப்பதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் கீழ் 13 குளங்கள், சேதமடைந்த ஓடைகள் சீர்செய்யப்படவுள்ளன. அத்துடன் புதிய ஓடைகளும் தடாகங்களும், குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படவுள்ளன. நீர்த் தட்டுப்பாடு காரணமாக மழை நீரில் உற்பத்தி செய்யக்கூடிய கரும்பு உற்பத்தி நிலங்களில் கரும்பு அறுவடை குறைந்ததாலேயே அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

நாட்டுக்குத் தேவையான மொத்த சீனியின் தேவையில் 10 சதவீதமே பெல்வத்த சீனித் தொழிற்சாலையில் இருந்து பெறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



## 100 சீன ஜோடிகளுக்கு கல்யாண வைபோகம்

கொழும்பு, டிசெ.18

சீன நாட்டைச் சேர்ந்த 100 தம்பதிகளுக்கு இலங்கைச் சம்பிரதாயப்படி ஒரே தினத்தில் கொழும்பு மாநகர சபை வளாகத்தில் நேற்றுப் பிற்பகல் திருமணம் செய்துவைக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டார்கள். அமைச்சர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஜோன் அமரதுங்க ஆகியோரும் இதில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர். சீனாவுக்கும், இலங்கைக்குமான பிணைப்பின் அடையாளமாக இந்த 100 தம்பதியரின் திருமணம் அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ)

## மகிந்த அணியினர் இன்னும் தாவுவர்

கொழும்பு, டிசெ.18

மகிந்த அணியில் உள்ள மேலும் சில உறுப்பினர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைய உள்ளதாக அறிய முடிகிறது.

இந்தக் கட்சித் தாவல்கள் எதிர்வரும் இரண்டு வாரங்களில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே, மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீயானி விஜேவிக்கரம ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து கொண்டார். அவருக்கு உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர், வீரகுமார திஸநாயக்க உள்ளிட்ட மூன்று பேர் ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டனர். இந்த நிலையில், கட்சித் தாவல்கள் காரணமாக தேர்தல் பிரசாரப் பணிகளை முன்னெடுப்பதில் மகிந்த அணியினருக்குப் பின்னடைவு ஏற்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

## 24 யானைகள் கொலை

கொழும்பு, டிசெ.18

மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு அதிகாரியின் துணையோடு, முன்னைய ஆட்சிக்காலத்தின் போது பெருந்தொகை யானைகள் கொலை செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


குற்ற விசாரணைத் திணைக்களம் மேற்கொண்ட விசாரணைக்கமைய குறைந்தது 24 யானைகள் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

யானை ரொஷான் என அழைக்கப்படும் நபரால் தாய் யானைகள் கொலை செய்யப்படுவதுடன், குட்டிகள் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவை 50 லட்சம் ரூபாவில் இருந்து 2 கோடி ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஊசிகள் மூலம் யானைகளை மயக்கமடையச் செய்து, யானைக் குட்டிகள் வாகனங்கள் ஊடாக கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. தாய் யானைகளுக்கு மயக்கமடைய செய்யும் மருந்து வழங்கப்பட்டு அவை சுயநினைவிழந்து பின்னர் அவற்றின் மயக்கத்தை தெளிவிப்பதற்கான மாற்று மருந்து வழங்காமையினால் சுமார் 24 யானைகள் உயிரிழந்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பிரதான பாதுகாப்பாளராக செயற்படும் நெவில் என்ற நபரின் ஒத்துழைப்புடனேயே இந்த யானைகள் கொலை செய்யப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. (அ)

## நியாய விலையில் தேங்காய்
### வேலைத்திட்டம் இன்று ஆரம்பம்



கொழும்பு, டிசெ.18

பொதுமக்களுக்கு நியாய விலையில் தேங்காயை வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

தேங்காய்க்கு ஆகக்கூடிய சில்லறை விலையாக 75 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சந்தையில் நிர்ணய விலையை விடவும் அதிக விலையில் தேங்காயை விற்பனை செய்ய முடியாது என்று தெங்கு உற்பத்தி சபையின் கபில யகந்தாவல தெரிவித்துள்ளார்.

"மொத்த விலையில் தேங்காய் தற்போது 40 ரூபாவுக்கும் 45 ரூபாவுக்கும் இடையில் காணப்படுகிறது. வர்த்தகர்கள் கூடுதலான இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேங்காயின் விலையை அதிகரித்துள்ளனர். இதுவே தேங்காய் விலைக்கு அதிகரிப்புக்குக் காரணம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அதிக விலை தேங்காயை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் சட்டத்தின் முன் நிறுத்த சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுமென்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

## கேப்பாபிலவுப் படையினர் புதிய நுழைவாயில் அமைப்பு



முல்லைத்தீவு, டிசெ.18

கேப்பாபிலவில் நிலை கொண்டுள்ள 59 ஆவது படைப் பிரிவு இராணுவத்தினர் தமது படைமுகாமுக்குச் செல்வதற்காக புதிய நுழைவாயில் ஒன்றை மிகப் பிரமாண்டமாக நிர்மாணித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இறுதிப் போரின் போது வற்றாப்பளை - புதுக்குடியிருப்பு பிரதான வீதியைக் கைப்பற்றிய இராணுவத்தினர், குறித்த வீதியை இடைமறித்து கேப்பாப்பிலவில் பல்வேறு முகாம்களை அமைத்தனர்.

இந்த முகாம்களுக்குள் நுழைவதற்காக பிரதான வீதியின் குறுக்கே பிரமாண்டமான நுழைவாயில் ஒன்றையும் அப்பொழுது இராணுவத்தினர் நிர்மாணித்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த பிரதான வீதி எதிர்வரும் 28ஆம் திகதி பொதுமக்களின் பாவனைக்காக திறந்துவிடப்படவுள்ளது. இதன் காரணமாகவே இராணுவ முகாம்களுக்கு செல்ல, புதிய பிரதான நுழைவாயிலைப் படையினர் நிர்மாணித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் மர்மக் காய்ச்சல் ஆராய விரைந்தது மருத்துவர் குழு

கொழும்பு, டிசெ. 18


முல்லைத்தீவில் பரவிய மர்மக் காய்ச்சல் குறித்து ஆராய்வதற்கு கொழும்பில் இருந்து விசேட மருத்துவர் குழு சென்றுள்ளது.

முல்லைத்தீவில் கடந்த 20 நாட்களில் பரவிய மர்மக் காய்ச்சலுக்கு 9 பேர் மரணமாகினர். இதையடுத்தே இந்த ஆய்வுக் குழு அங்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. அத்துடன் தடுப்பு நடவடிக்கையும் முன்னெடுத்துள்ளது.

முல்லைத்தீவு நகரப் பகுதியைச் சேர்ந்தவர்களே இந்தக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தனர். தொடர்ச்சியான காய்ச்சலின் பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 9 பேரும் உயிரிழந்தனர்.

இந்த விடயம் வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து கொழும்பு தொற்று நோய் தடுப்புப் பிரிவு மற்றும் ஆய்வகத்தின் கவனத்துக்கு சுகாதாரத் திணைக்களம் கொண்டு சென்றது. இதையடுத்தே முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் தடுப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவகை காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இருவர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ச)





மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் இரதோற்சவம் நேற்று இடம்பெற்றபோது....





மறவன்புலோவை சேர்ந்த பிரபாகரன் என்பவர் தண்ணீரில் ஓட்டிச் செல்லக்கூடிய சைக்கிளைக் கண்டு பிடித்துள்ளார். அதனை ஒருவர் ஓட்டிச் சென்றபோது...

# நூதனத் திருட்டுகள் விழிப்பாக இருங்கள்

இளவாலை, டிசெ. 18

நூதனத் திருட்டுகள் குறித்து பொது மக்கள் விழிப்பாக இருக்குமாறு இளவாலைப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அடை மழை நிறைவடைந்துள்ள நிலையில், வெள்ள நிவாரணத்துக்கு உதவி வழங்குவதாகக் கூறி வரும் சிலர், வீடுகளுக்குள் பிரவேசித்து நூதனமுறையில் திருடி வருகின்றனர்.

இரு இளைஞர் குழுக்களாக வீடுகளுக்குள் வரும் இவர்கள் தனிமையில் வசிக்கும் வயோதிபர்களை தாக்கி விட்டு நகை, பணத்தைக் கொள்ளையடித்தும் திருடியும் செல்கின்றனர்.

கடந்த வாரம், பண்டத்தரிப்பில் வயோதிபப் பெண்ணைத் தாக்கிய கொள்ளையர்கள் இருவர், அவர் அணிந்திருந்த 2 பவுண் தங்கச்சங்கிலியை அறுத்தெடுத்துவிட்டு, தப்பிச் சென்றுள்ளனர்.

எனவே, இனந்தெரியாத நபர்கள் யாராவது வீடுகளுக்குள் நுழைந்தால், அவர்கள் தொடர்பில் விழிப்புடன் இருக்கவும். அவர்களின் நடத்தையில் சந்தேகம் இருந்தால், அவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு உடன் தகவல் வழங்குங்கள்.

மேலும், பகல் நேரத்தில் வீட்டின் வெளிக்கதவை பூட்டுவதுடன், உள் கதவையும் பூட்டிவிட்டு ஏனைய வேலைகளில் ஈடுபடுமாறும், பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ச)

## தொடர்ச்சிகள்

**மண்டியிட்டால்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய அரசிடம் மண்டியிட்டிருந்தால் மகத்தான உயர்ச்சியைப் பெற்றிருக்கலாம். ஆனால், சுயமரியாதையை இழந்து மாகாணத்தைத் தெற்கிடம் அடகு வைத்திருப்போம்.

- யாழ். ஊடக அமையத்தில் நேற்று முதலமைச்சர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நான் தென்னிலங்கையில் பிறந்து வளர்ந்தவன். என்னால் மென்போக்கை ஏற்றுச் செயற்பட முடியும். ஆனால் எமது இனம் வெகுவிரைவாகத் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களால் கபளீகரம் செய்யப்பட்டு விடும்.

அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசும் மத்திய அரசு அதிகாரங்களைப் பகிர முன்வராத நிலையே நீடிக்கிறது. இந் நிலைமை மாற வேண்டுமானால் அரசியல் யாப்பு மாற்றம் ஒன்று உடனடியாகத் தேவை. வடக்கு மாகாணத்தின் நிர்வாகக் கட்டமைப்பு உட்பட பல விடயங்களில் மத்திய அரசின் தலையீடு அதிகம் உள்ளது. இதற்கு வடக்கில் பணியாற்றும் பல அதிகாரிகளும் உடந்தையாக உள்ளனர்.

மாகாண சபையை ஆட்சி செய்வதற்கு13 ஆவது திருத்தத்தின் அதிகாரங்கள் போதாமல் உள்ளன. வடக்கு மாகாண சபையில் பல விடயங்களை நான் செய்ய முயன்றபோதும், அவை தடுக்கப்பட்டன. கடந்த காலத்தில் அரசியல்வாதிகளின் அடிவருடிகளாக சில அலுவலர்கள் செயற்பட்டமையே இதற்குக் காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**எழுச்சிக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இளைஞர்களுக்கு இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கிறார் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களை முதலமைச்சர் சந்தித்தார். இதன்போது முதலமைச்சருக்கு ஆதரவாகத் திரண்டு வந்த இளம் சமூகத்தினருக்குக் கூற விரும்பும் செய்தி என்ன? எனக் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இளைஞர்களின் தன்னார்வ தன்னியக்க திடீர் எழுச்சி ஒரு விடயத்தை புலப்படுத்தியது. கட்சி ரீதியான உட்பூசல்களை மக்கள் வெறுக்கின்றார்கள் என்பதே அது. அதாவது கட்சிகள் மக்கள் சேவையிலும் பார்க்க தமது கட்டுக்கோப்பின் கரிசனையிலேயே நாட்டம் காட்டி வருகின்றார்கள்.

கட்டுக்கோப்பு என்று கூறும் போது கட்சிகளின் தலைமைத்துவத்தின் ஆதிக்கமே அங்கு நிலவுகின்றது. கட்சியின் தலைமைத்துவம் நினைப்பதை உறுப்பினர் கேள்விக்குட்படுத்தினால் உறுப்பினர் பாடு அதோ கதிதான். அடுத்த தேர்தலுக்கு துண்டு தரப்படமாட்டாது. ஒரு சில கட்சிகளே ஜனநாயகச் செயற்பாட்டைத் தமது கட்சியை நடத்துவதில் கடைப்பிடிக்கின்றார்கள்.

ஆகவே எனக்காக திரண்ட இளம் சமூகத்திற்கு நான் கூற விரும்புவது எதுவென்றால், உங்கள் எழுச்சியால் எவ்வாறு முதலமைச்சரை இதுவரை நிலைக்க வைத்தீர்களோ, அதே எழுச்சியை மக்கள் இயக்கமாக பரிணமித்து அரசாங்கத்திற்கு காட்ட வேண்டிய தருணம் நெருங்கி விட்டது.

நாம் எதிர்பார்க்கும் நீண்டநாள் பிரச்சினைகளை நிலையாகத் தீர்க்கும் தீர்வு எட்டப்படாது என்பதே எனது கணிப்பு. ஆகவே தருணம் பார்த்திருங்கள். உங்கள் தகைமை வெளிப்படப்போகும் காலம் வெகு தூரத்தில் இல்லை" - என்றார். (ச)

**புலிகளின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதையல் தோண்டுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மூவரையும் கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்டவர்களை மாவட்ட நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் முன்னாள் போராளி என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

**முல்லைத்தீவில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பிலும், மலேரியா நோய் பரப்புகின்ற நுளம்புகளின் பெருக்கம் தொடர்பிலும் நான் ஏற்கனவே சுகாதார அமைச்சின் அவதானத்திற்குக் கொண்டு வந்துள்ள நிலையில், தற்போது மேற்படி மர்மக் காய்ச்சல் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒன்பது உயிர்களைப் பலியெடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

சுமார் மூன்று வார காலப் பகுதிக்குள் 9 பேர் உயிரிழந்தமையானது மிகவும் பாரதூரமான நிலைமையாகவே காணப்படுகின்றது. எனவே, இந்த விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ் விடயம் தொடர்பில் உடனடி அவதானமெடுத்து, மேற்படி நோயின் காரணம் கண்டறியப்படவும், இந்நோய் மேலும் பரவாமல் தடுப்பதற்கும், நோய்க்கான மருந்து வகைகள் பற்றாக்குறை அல்லது தேவைகள் இருப்பின் அவற்றை விரைந்து வழங்குவதற்கும் நடவடிக்கை எடுங்கள்" என்று டக்ளஸ் தேவானந்தா சுகாதார அமைச்சரைக் கோரியுள்ளார். (அ)

**வவுனியா...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனத்தையும் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர். அத்துடன் சாரதியை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

**நாங்கள்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியதில்லை. பதவிகளுக்காக அடிபட்டு, நகர சபையை முடக்கி இறுதியில் கலைக்க செய்திருந்தனர். கூட்டமைப்பின் தலைமைத்துவம் கூட குறித்த விடயத்தை தீர்த்து வைக்காதது கவலைக்குரிய விடயமும் நடந்தேறியது.

இத்தகைய பின்னணியிலேயே பேரழிவுகளைத் தந்த யுத்தத்தால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறையைக் கட்டியெழுப்பும் நோக்கில், மக்களின் ஆதரவுடன், கடந்த காலங்களில் பொது வாழ்வுக்குத் தம்மை அர்ப்பணித்து மக்களிடத்தே நன்மதிப்பைப் பெற்றவர்களே ஒன்றிணைந்து சுயேச்சையாகப் போட்டியிடுகிறோம்.

வல்வெட்டித்துறை நகர சபையில் கடந்த முறை நடந்த நிகழ்வுகளால் மிகவும் அதிருப்தியடைந்த மக்கள் எமக்கு ஆதரவை வழங்கி வருகின்றனர். இந்நிலையில், கடந்த தடவை நகர சபையை முடக்கி விட்டு இம்முறையும் மக்கள் தமக்கு ஆதரவளிப்பார்கள் என நினைப்பது பகற்கனவு மாத்திரமின்றி நப்பாசையாகும் - என்றார். (ச)

**இன்று ஆரம்பம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்கீழ், 17 மாநகர சபைகள், 23 நகர சபைகள், 208 பிரதேச சபைகளுக்கான இரண்டாம் கட்ட தேர்தல் பணிகள் இடம்பெறுகின்றன.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான முதலாம் கட்டப் பணியின் கீழ் கட்டுப்பணம் செலுத்தல், வேட்புமனுக்கள் பொறுப்பேற்றல் பணிகள் கடந்த வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவு பெற்றன.

இதன் போது 21 மாவட்டங்களில் 93 உள்ளூராட்சி மன்றங்களுக்காக வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 7 மாநகர சபைகள், 18 நகர சபைகள், 68 பிரதேச சபைகளுக்காக 30 அரசியல் கட்சிகளும், 49 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களை கையளித்தன.

வேட்புமனுக்கள் பொறுப்பேற்கப்பட்ட பின்னர், தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தேர்தல் நடைபெறும் திகதியை அறிவிப்பார். வேட்புமனுக்களை ஏற்கும் பணிகள் இரண்டு கட்டமாக இடம்பெற்றாலும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒரே தினத்திலேயே இடம்பெறும் என்றும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.(ச)


உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# விளையாட்டால் வந்த கோடிகள்

லண்டன், டிசெ.18

யூரியூப் காணொளித் தளத்தில் இந்த ஆண்டு அதிகம் சம்பாதித்தவர்களில், பிரிட்டனைச் சேர்ந்த டான் மிடில்டன் முதலிடம் பிடித்துள்ளார். யூரியூப்பில் அதிகம் சம்பாதிப்போரின் பட்டியலை போர்ப்ஸ் இதழ் வெளியிட்டுள்ளது.

பிரிட்டனின் அல்டெர்ஷாட் என்னும் பகுதியைச் சேர்ந்த டான் மிடில்டன் (வயது-26) என்ற இளைஞர், தான் விளையாடும் மைன்கிராஃப்ட் மற்றும் போகிமோன் ஆகிய விளையாட்டுகளை காணொளியாகப் பதிவு செய்து யூரியூப்பில் பகிரத் தொடங்கினார்.

16 மில்லியனுக்கும் அதிகமான சந்தாதாரர்களை யூரியூப்பில் பெற்றுள்ள இவரின் காணொளிகளை 10 பில்லியனுக்கும் அதிகமானோர் பார்த்துள்ளனர். இதனால் 2017 இல் யூரியூப்பில் அதிகம் சம்பாதித்தவர்களில் முதலிடத்தை எட்டிப் பிடித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள் விபரம் வருமாறு:

1 ஆவது இடம் - டான் மிடில்டன் - 105.67 கோடி - 16 மில்லியனுக்கும் அதிகமான சந்தாதாரர்களை யூரியூப்பில் பெற்றுள்ள இவரின் காணொளிகளை 10 பில்லியனுக்கும் அதிகமானோர் பார்த்துள்ளனர்.

2ஆவது இடம் - ஈவன் பாங் - 99.37 கோடி - இந்தப் பட்டியலில் முதல் முறையாக இடம்பிடித்துள்ள இவர் ஒரு புகைப்படப்பிடிப்பாளர்.

3 ஆவது இடம் - டூட் பெர்பெக்ட் என்ற நிறுவனம் - 89.76 கோடி - இவர்கள் விளையாட்டுத் தொடர்பான வித்தைகளையும், தந்திரங்களையும் காணொளியில் பதிவேற்றம் செய்கிறார்கள். (இ)

# கிறிஸ்மஸ் காலத்தில் பயங்கரவாதத் தாக்குதல்

## பிரிட்டனில் எச்சரிக்கை

லண்டன், டிசெ.18

"பிரிட்டனில் கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தில் பயங்கரவாதத் தாக்குதலுக்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இந்தப் பயங்கரவாத தாக்குதல் எந்த நேரத்தில் வேண்டும் என்றாலும் நடத்தப்படலாம்" என்று பிரிட்டனின் முன்னாள் பயங்கரவாதத் தடுப்பு அதிகாரி க்றிஸ் ஃபிலிப்ஸ் தெரிவித்துள்ளார்

"முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தற்போது பிரிட்டனில் அடிப்படைவாதிகளின் எண்ணிக்கை மிக அதிகரித்துள்ளது. பயங்கரவாதக் கண்காணிப்பு பட்டியலில் சுமார் 20,000 பேர் உள்ளனர். இது பிரிட்டனுக்கு விடப்பட்டிருக்கும் பெரும் அச்சுறுத்தல். இந்த நிலையில் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னர் ஏதேனும் பயங்கரவாதத் தாக்குதல் நடந்தால் அது வியப்பல்ல" எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில் அமைந்துள்ள கிறிஸ்மஸ் சந்தைகளில் பயங்கரவாத தாக்குதல் முன்னெடுக்கப்படும் என ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், தற்போது பிரிட்டனின் முன்னாள் பயங்கரவாத தடுப்பு அதிகாரி க்றிஸ் ஃபிலிப்ஸ் அதை உறுதி செய்துள்ளார்.

இந்த ஆண்டு மட்டும் வெஸ்ட்மின்ஸ்டர், மான்செஸ்டர் அரினா, லண்டன் பிரிட்ஜ் மற்றும் பார்சன்ஸ் கிரீன் ரயில் ஸ்டேஷன் உள்ளிட்ட நான்கு முக்கிய இடங்களில் பயங்கரவாத தாக்குதல்களுக்கு பிரிட்டன்இரையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ)

# ஹெலிகொப்டர் விபத்தில் பிரதமரின் சகோதரி சாவு



டெகுசிகல்பா,டிசெ.18

ஹொண்டுராஸ் நாட்டில் ஏற்பட்ட ஹெலிகொப்டர் விபத்தில் அந்த நாட்டு பிரதமரின் சகோதரி உட்பட 6 பேர் பலியாகியுள்ளனர்.

ஹொண்டுராஸ் நாட்டின் பிரதமரான ஆர்லேண்டோ ஹெர்னாண்டஸின், சகோதரியான ஹில்டா ஹெர்னாண்டஸ் (வயது 51) என்பவரே இவ்வாறு ஹெலி விபத்தில் உயிரிழந்தவராவார். இவர் பிரதமருக்கு நெருங்கிய ஆலோசகராக இருந்தவர். அதற்கு முன்பு அரசின் செயலாளர் பதவியையும் வகித்துள்ளார்.

ஏ.எஸ்.350 என்ற ஈகுரூயில் ரக ஹெலி ஒன்றில் டான்கான்டின் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு கோமயாகுவா நோக்கி, ஹில்டா பயணித்துள்ளார். இந்நிலையிலேயே, ஹெலி விபத்தில் சிக்கியுள்ளது. இதில், ஹில்டா மற்றும் அவருடன் பயணித்த 5 பேரும் பலியாகினர். அவர்களது உடல்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த விபத்து பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (இ)



# இம்ரானின் சகாவுக்கு வாழ்நாள் அரசியல் தடை!

இஸ்லாமாபாத், டிசெ.18

முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கானின், பாகிஸ்தான் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியின் பொதுச் செயலாளர் ஜஹாங்கீர் தாரீன், வாழ்நாள் முழுவதும் அரசியலில் ஈடுபட உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

தெஹ்ரிக் இ இன்சாப் கட்சித் தலைவர் இம்ரான் கான், பொதுச்செயலாளர் ஜஹாங்கீர் தாரீன் ஆகியோர் வெளிநாடுகளில் சட்ட விரோத பணப் பரிமாற்றங்களில் ஈடுபட்டதாகவும் அந்தப் பணத்தின் மூலம் பாகிஸ்தானில் சொத்துகள் வாங்கியதாகவும் குற்றம் சாட்டி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் மூத்த தலைவர் ஹனீப் அப்பாஸி 2016 நவம்பரில் இந்த வழக்கைத் தொடர்ந்தார். தலைமை நீதிபதி மியான் சாகிப் நிசார் தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வு வழக்கை விசாரித்து நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது.

இம்ரானுக்கு எதிரான மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர். ஜஹாங்கீர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால் அவர் வாழ்நாள் முழுவதும் அரசியலில் ஈடுபடக் கூடாது என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர். அதன்படி ஜஹாங்கீர் நேற்று கட்சிப் பதவியை ராஜினாமா செய்தார். பனாமா பேப்பர்ஸ் வழக்கில் உச்ச நீதிமன்ற உத்தரவு காரணமாக முன்னாள் பிரதமர் நவாஸ் எம்.பி. மற்றும் பிரதமர் பதவியை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# புகைப்படத்தால் கொலை மிரட்டல்

தெஹ்ரன், டிசெ.18

இஸ்ரேல் அழகியாகப் பட்டம் வென்றவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்ட ஈராக்கின் பிரபஞ்ச அழகிப் போட்டியாளரின் குடும்பத்தினருக்கு மர்ம நபர்கள் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

ஈராக்கின் பிரபஞ்ச அழகிப் போட்டியாளரான சாராஹ் ஈடன் என்பவர், இஸ்ரேலின் அழகியாகத் தெரிவு செய்யப்பட்ட அபார் ஹண்டெல்ஸன் என்பவருடன், அமெரிக்காவின் லொஸ் வேகாசில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் புகைப்படம் எடுத்தார். குறித்த புகைப்படத்தை அவர் சமூக வலைத்தளங்களிலும் பதிவேற்றம் செய்தார்.

ஆனால் குறித்த புகைப்படத்தைப் பார்த்த ஈராக்கியர்கள் கடும் சினம்கொண்டுள்ளனர். குறித்த புகைப்படத்தை சமூக வலைத் தளத்தில் இருந்து அப்புறப்படுத்தாவிட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும், குடும்பத்தை கூண்டோடு அழித்து விடுவோம் எனவும் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.இதனால் ஈராக்கில் உள்ள சாராவின் குடும்பத்தினர் நாட்டைவிட்டே வெளியேறும் கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். (இ)



# தொழிலதிபரும் மனைவியும் மர்ம மரணம்



ரொரண்டோ, டிசெ.18

கனடாவின் பிரபலமான தொழிலதிபரும், அவரது மனைவியும் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

கனடாவைச் சேர்ந்தவர் பேரி ஷெர்மேன். இவர், பொது மருந்து தொழில் அதிபர். இவரது 'அபோடெக்ஸ்' மருந்து நிறுவன தயாரிப்புகள், உலகமெங்கும் விற்பனை ஆகின்றன. இவரது நிறுவனம், உலகளவில் மருந்து வர்த்தகத்தில் 7 ஆவது இடத்தில் உள்ளது. இவரது மனைவி ஹனி. டொராண்டா நகரின் வடகிழக்கு பகுதியில் உள்ள வீட்டில் இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் பிணமாக மீட்கப்பட்டனர்.

"அவர்கள் மரணம் அடைந்துள்ள விதம் மர்மமாக உள்ளது. அந்தக் கோணத்தில் நாங்கள் விசாரணை நடத்தி வருகிறோம்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# புதிய சூரியக் குடும்பம்

வோஷிங்டன், டிசெ.18

சூரியக் குடும்பத்தைப்போலவே, விண்வெளியில் மற்றொரு சூரிய குடும்பம் இருப்பதை அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் கண்டுபிடித்துள்ளது.

பூமியைப் போலவே மனிதர்கள் உயிர் வாழக் கூடிய வேறு கிரகங்கள் உள்ளனவா என்பதை அறிந்துகொள்ள பல நாடுகளும் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன. தவிர வேற்றுக்கிரகவாசிகள் (ஏலியன்கள்) பறக்கும் தட்டில் பூமிக்கு வந்து செல்வதாகக் கூறப்படுவது குறித்தும் ஆராய்ச்சிகள் நடக்கின்றன. இதன் போதே புதிய சூரியக் குடும்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய சூரிய குடும்பத்தை கூகுளின் செயற்கை நுண்ணறிவு கருவிகள் மற்றும் நாசாவின் கெப்ளர் தொலைநோக்கி போன்றவற்றின் உதவியுடன் கண்டுபிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கல்லீரல் கையொப்பம் மருத்துவருக்கு ஆப்பு

லண்டன், டிசெ.18

வெற்றிகரமாக கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சையைச் செய்த மருத்துவர், குறித்த கல்லீரல்களில் தன் கையொப்பத்தை இட்டதால் சிக்கலை எதிர்நோக்கியுள்ளார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த 53 வயது மருத்துவ நிபுணர் சிமோன் பிரம்ஹால் 2013 ஆம் ஆண்டு ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டார். 12 வருட அனுபவம் என்பதால் இரண்டு அறுவை சிகிச்சைகளும் வெற்றிகரமாக நடந்துமுடிந்தன. சிமோனைப் பாராட்டி பத்திரிகைகளில் செய்திகளும் வெளிவந்தன.

இவரிடம் அறுவை சிகிச்சை செய்தவர்களில் ஒருவருக்குச் சிறிது காலத்துக்குப் பிறகு மீண்டும் ஏதோ பிரச்சினை. அதனால் மறுபடியும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இந்த முறை வேறு மருத்துவர்கள் அந்தப் பணியை மேற்கொண்டனர். அப்போது கல்லீரலில் 'எஸ்பி' என்று சிமோன் பிரம்ஹால் பெயரின் முதல் இரண்டு எழுத்துகளும் இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். சாதாரணமாக அறுவை சிகிச்சை செய்யும்போது ஏற்படும் வடுக்கள் கூட வெகு விரைவில் மறைந்துவிடும். ஆனால் இவரது எழுத்துகள் அப்படியே இருந்தது கண்டு ஆச்சரியமடைந்தனர். சிமோன் மீது குற்ற வழக்கு தொடுக்கப்பட்டது. தற்போது நிபந்தனையற்ற பிணையில் வெளியில் இருக்கும் சிமோன், அடுத்த மாதம் கிடைக்கப் போகும் தீர்ப்புக்காகக் காத்திருக்கிறார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவான் சதம் தொடர் இந்தியாவுக்கு!



விசாகப்பட்டினம், டிசெ.18

இலங்கைக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டியை இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்று தொடரைக் கைப்பற்றியது.

இந்தத் தொடரில் இரு அணிகளும் 1-1 என்று சமநிலையில் இருந்ததால், தொடர் யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் இறுதிப்போட்டி விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் இலங்கையைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான குணத்திலக 3.4 ஆவது ஓவரில் வெளியேறினாலும் தரங்கவும், சமரவிக்ரமவும் நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தி இலங்கை அணிக்கு உரம் சேர்த்தார்கள். இந்தக் கூட்டணியை 22.3 வது ஓவரில் சாஹல் உடைத்தார். சமரவிக்ரம 42 ஓட்டங்களோடு வீழ்த்தப்பட்டார்.

இதனையடுத்து தரங்க விக்கெட்டை குல்தீப் எடுத்தார். 27.1 ஆவது ஓவரில் சதம் நோக்கி விளையாடிய தரங்க 95 ஓட்டங்களில் டோனியிடம் பிடி கொடுத்து வெளியேறினார். அதன் பின்னர் களமிறங்கிய இலங்கை வீரர்களை இந்தியப் பந்துவீச்சாளர்கள் நீண்ட நேரம் நிற்கவிடவில்லை.

இலங்கை அணி 44.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 215 ஓட்டங்களையே எடுத்தது.

216 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கோடு இந்தியா களமிறங்கியது. இரண்டாவது ஒருநாள் போட்டியில் இரட்டைச் சதம் அடித்த ரோகித் ஷர்மா, 3.4 ஆவது ஓவரில் 7 ஓட்டங்களோடு வெளியேறினார். இதனையடுத்து ஷிகர் தவானுடன் ஸ்ரேயாஸ் ஐயர் இணைந்தார். இருவரும் இலங்கை அணியின் பந்துவீச்சை பதம் பார்த்தார்கள். இருவரும் அரைச் சதம் கடந்து விளையாடிய போது கூட்டணி உடைந்தது. 22.4 ஆவது ஓவரில் ஸ்ரேயாஸ் அய்யர் 65 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். பின்னர் தினேஷ் கார்த்திக்கும், ஷிகர் தவானும் கூட்டணியமைத்து 32.1 வது ஓவரிலே வெற்றியைப் பறித்தனர்.

இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பதிவு செய்தது. ஷிகர் தவான் 100 ஓட்டங்களுடனும், தினேஷ் கார்த்திக் 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர். இந்தியா 2-1 என்ற கணக்கில் தொடரை வென்றது. (அ)

# வெற்றியை நெருங்கும் ஆஸி.!

பேர்த், டிசெ.18

அவுஸ்ரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரில், பேர்த்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான மூன்றாவது டெஸ்டில் அடுத்த வெற்றியை நோக்கி அவுஸ்ரேலியா நெருங்கியுள்ளது.

இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, சகல விக்கெட்டுகளையும் இழந்து 403 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், டேவிட் மலன் 140, ஜொனி பெயார்ஸ்டோ 119, மார்க் ஸ்டோன்மன் 56 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், மிற்செல் ஸ்டார்க் 4, ஜொஷ் ஹேசில்வூட் 3, பற் கமின்ஸ் 2, நதன் லயன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு, தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா, 9 விக்கெட் இழப்புக்கு 662 ஓட்டங்களைக் குவித்தபோது து ஆட்டத்தை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித் 239, மிற்செல் மார்ஷ் 181, உஸ்மான் கவாஜா 50, டிம் பெய்ன் ஆட்டமிழக்காமல் 49, பற் கமின்ஸ் 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஜேம்ஸ் அன்டர்சன் 4, கிரேய்க் ஒவெர்ட்டன் 2 மற்றும் கிறிஸ் வோக்ஸ், மொயின் அலி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து, நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் மழை காரணமாக முடிவுக்கு வரும்போது, 4 விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலிய அணியின் முதலாவது இனிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையை விட 127 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது. தற்போது களத்தில், டேவிட் மலன் 28, ஜொனி பெயார்ஸ்டோ 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர். (அ)



# வெற்றி-16



லண்டன், டிசெ.18

பிரிமீயர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் இதுவரை தோல்வியை சந்திக்காமல் 16 வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது மன்செஸ்டர் சிட்டி அணி.

டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணியை மன்செஸ்டர் சிட்டி அணி நேற்று முன்தினம் எதிர்கொண்டது.

சொந்த மைதானத்தில் மன்செஸ்டர் சிட்டி வீரர்கள் அட்டகாசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். ஆட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் அந்த அணிக்கு ‘கோர்னர் கிக்’ வாய்ப்பு கிடைத்து. கோர்னரில் இருந்து அடித்த பந்தை இல்காய் கண்டோகன் தலையால் முட்டி கோலாக்கினார். அதன்பின் இரு அணி வீரர்களும் முதல் பாதி நேரத்தில் கோல் அடிக்க முடியாததால் 1-0 என மன்செஸ்டர் சிட்டி முன்னிலை பெற்றிருந்தது.

2 ஆவது பாதி நேரத்திலும் மன்செஸ்டர் சிட்டி அணிகள் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 70அவது நிமிடத்தில் கெவின் டி புருயின் ஒரு கோலும், 80 ஆவது மற்றும் 90 ஆவது நிமிடத்தில் ரஹீம் ஸ்டெர்லிங் அடுத்தடுத்து கோலும் அடிக்க மன்செஸ்டர் சிட்டி 4-0 என முன்னிலை பெற்றது.

காயம் காரணமாக வழங்கப்படும் கூடுதல் நேரத்தில் ஆட்டத்தின் 93 ஆவது நிமிடத்தில் டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் வீரர் கிறிஸ்டியன் எரிக்சன் ஆறுதல் கோல் அடித்தார். இதனால் மன்செஸ்டர் சிட்டி 4-1 என வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் பிரிமீயர் லீக் தொடரில் மன்செஸ்டர் சிட்டி தொடர்ச்சியாக 16 ஆவது வெற்றியை ருசித்துள்ளது. (அ)

# எனக்கு இடமில்லை



கயானா, டிசெ.18

“ நான் இனி மேற்கிந்திய அணியில் இடம்பிடிப்பது சந்தேகம்தான்” என்று கவலை வெளியிட்டுள்ளார் சகலதுறை வீரர் பிராவோ.

மேற்கிந்திய அணியின் தலைசிறந்த சகலதுறை வீரராகத் திகழ்ந்தவர் டுவைன் பிராவோ. டெஸ்ட் போட்டியில் விளையாடாமல் ஒருநாள் மற்றும் ‘ரி-20 ‘ கிரிக்கெட் தொடரில் மட்டுமே அவர் பங்கேற்று வந்தார். மேலும், பல்வேறு கிரிக்கெட் சபைகளால் நடத்தப்படும் ‘ரி-20 ‘ லீக் தொடர்களில் முக்கிய வீரராக பங்கேற்று வந்தார். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பிக் பாஷ் தொடரின்போது தொடைப்பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக நீண்ட காலமாக கிரிக்கெட் விளையாடாமல் இருந்து வந்தார்.

தற்போது காயத்தில் இருந்து மீண்டுள்ள டுவைன் பிராவோ மேற்கிந்திய அணிக்காக விளையாட விரும்பினார். விரைவில் தொடங்கும் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாட விரும்பினார். அணியில் இடம் கிடைக்கும் என அதிக நம்பிக்கையில் இருந்தார். ஆனால் அணியில் இடம் கிடைக்கவில்லை. இந்நிலையில் இனிமேல் அணிக்குத் திரும்புவது சந்தேகமே என பிராவோ கூறியுள்ளார்.

“சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அணியில் இருந்து நான் நீக்கப்பட்டு இருக்கிறேன். நல்ல உடல் தகுதியுடன் இருந்தபோதும் என்னைச் சேர்க்கவில்லை. எனவே மீண்டும் மேற்கிந்தியஅணிக்குத் திரும்ப முடியும் என்று நினைக்கவில்லை. என்னால் எத்தனை ஆண்டு காலம் கிரிக்கெட் விளையாட முடியுமோ? அத்தனை காலம் வரை தொடர்ந்து விளையாடுவேன்” என்று அவர் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 18.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.